## தமிழ் இலக்கிய நயம்
## விடைக்குறிப்புகள்
## வினாத்தாள் I

1. அ. இலக்குவணன்
   ஆ. இலக்குவணன் வருகின்ற பாதையினை வானர மகளிரோடு சென்று தடுத்தல்
2. அ. திருக்குறள்
   ஆ. போர்க்களத்தில் பகைவர்கள் அஞ்சும் வீரனை மென்மையான காதல் தோற்கடிக்கின்றது.
3. அ. மாலை, தொடுத்து
   ஆ. பூக்களைப் போன்ற அழகிய கண்களை உடையவள்.
4. அ. மதுரை
   ஆ. பாண்டியன் நெடுஞ்செழியன், கண்ணகி
5. அ. மாடசாமியின் நண்பர்
   ஆ. பசுக்கன்று

02.

1. தன்கா, சோக்கா, ரெங்கா, டாங்கா, சென்றியு, ஹைபுல், ஹொக்கு
2. அனுபவத்தையும் உணர்வையும் பிறருக்குக் கொடுப்பது.
3. 5, 7, 5 அசைகளைக் கொண்ட ஜப்பானியக் கவிதை
4. ஹைக்கூ ஒரு அனுபவப் பகிர்வு, வியப்பில் ஆழ்த்தும் வீச்சு, இரசனையூட்டும் அழகு, சிந்தனை எழுப்பும் அலை, உணர்ச்சியை ஏற்றும் தூண்டியாக அமையும் ஆற்றல் மிக்க வடிவம், ஒரு மின்னல் அல்லது மின்மினி எனலாம்.
5. அனுபவத்தையும் உணர்வையும் தரமுயல்வது.
   வாசகர் மனதில் சிந்தனைகள், சம்பாசனைகள், எதிர்வினைகள், கேள்விகளையும் கிளர்த்தும்
   தத்துவப்பார்வை கொண்டது. காந்தம் போல இழுக்கும் மொழிநடை
   அந்தரங்கங்களைக் காட்சிப்படுத்துவது.

**அல்லது**

1. செவிலித்தாய் தலைவி வாழும் இல்லம் சென்று, அவள் வாழும் இல்லறப்பாங்கினைக் கண்டு அவளைப் பெற்ற நற்றாய்க்கு எடுத்துரைக்கும் சந்தர்ப்பம்.
2. காந்தள் போன்ற மெல் விரல்கள், குவளை மலர் போன்ற கண்கள்., ஒளி படைத்த நெற்றியும் முகமும்
3. கட்டித்தயிரினை தன் மென்மையான விரல்களால் பிசைதல்.
   நழுவிச் செல்லும் தன் உயர்ரக ஆடையின் பெறுமதியை பொருட்படுத்தாது தயிரை பிசைந்த விரல்களைக் கழுவாமல் அவ்விரல்களாலேயே அதனைச் சரிசெய்தபடி சமைத்தமை.
   தாளித்த புகை அவளின் கண்களை வருத்திய போதும் தலைவனுக்கு தான் செய்யும் குழம்பின் சுவை கெட்டுவிடக்கூடாது எனக்கருதி துழாவி சமைத்தல்

4. காந்தள் மெல்விரல்
   உவமானம் - காந்தள் மலர் உவமேயம் - கைவிரல் பொதுத்தன்மை - மென்மை

   குவளை உண்கண்
   உவமானம் - குவளை மலர் உவமேயம் - தலைவியின் கண் பொதுத்தன்மை - நிறம்

   இங்கு தலைவியின் விரல்களின் மென்மைத் தன்மை, அழகு விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

## பகுதி II

அ. மனித வாழ்வில் அகம் என்பது காதல் வாழ்க்கையாகும். காதல் பற்றிக் கூறும் இலக்கியங்கள் அகத்திணை இலக்கியங்களாகும். இவ் அகத்திணையில் தலைவன் தலைவியிடையே ஏற்படும் காதல் (சிற்றின்பக்காதல்) உலகியல் காதல் ஆகும்
இறைவன் அடியவரிடையே ஏற்படும் காதல் (பேரின்பக்காதல்) தெய்வீகக்காதல் என அழைக்கப்படும். இவ்வாறு காலம் தோறும் இவ்அகத்திணை முக்கியத்துவம் பெறுகின்றது.

ஆ. சிற்றின்பக் காதலை குறுந்தொகை, கார்நாற்பது, நளவெண்பா ஆகிய பாடல்கள் மூலம் காணலாம்
நீர்ச்சுனையின் அருகேயுள்ள பூக்களைப் பறித்து மாலையைத் தொடுத்து தினைத்தோட்டத்திற்கு வரும் கிளிகளை விரட்டுகின்ற அப்பெண்ணின் காதலால் என் உள்ளம் அவளிடமே சென்றுவிட்டது எனவும், செயல்முற்றுப் பெற்று மீளுகின்ற தலைமகன் பாங்கனுக்கு சொல்வதனூடாக காதலியின் ஊரானது நமக்கு நல்விருந்தாய் அமையும் இடமாகட்டும். என்பதனூடாக தலைவனின் காதலும்,

தமயந்தி காதலால் உள்ளம் வெட்கம் முதலியவற்றை இழந்து உயிரும் தளரப் பெறல்.

இ. மத்தளம் கொட்ட….. நேற்றிரா வந்திருந்தான்….. என்ற பாடல்கள் ஊடாக சுட்டப்படுதல்.

கண்ணன் மீது காதல் கொண்ட ஆண்டாள் கனவிலும் நனவிலும் அவன் நினைவாகவே வாழுதல்.
அவன் கைத்தலம் பற்றுவதாகக் கனவு காணுதல்.
பரம்பொருளே தன்னை ஆட்கொள்கின்றது என்று கூறுவதன் மூலம் இறையியற் காதல் விளக்கப்படுகின்றது.
ஏகம்பரநாதர் மீது காதல் கொண்ட பெண் அவரை அடைவதையே இலட்சியமாகக் கொள்ளுதல்.
அவர் பற்றி தோழிகளிடம் வினாவுகின்றாள்.
அவர் தனது கரம் பற்றியதாகவும் அவரைக் களித்திருந்துவிட்டுப் போகும்படி தான் வேண்டியதாகவும் அவர் மறைந்துவிட்டார் என்று கூறுவதன் ஊடாக இறையன்பைத் தேடும் பேரின்பக்காதல் வெளிப்படுகின்றது.

ஈ. மத்தளம் கொட்டுதல்

வரியை உடைய சங்குகளை ஊதுதல்.
முத்து மாலைகள் நிரையாகத் தொங்கவிடப்பட்ட திருமணப்பந்தல் அமைத்தல்.
மைத்துனன் முறையான திருமால் திருமணம் செய்தல்.

உ. உவமையணி

"பள்ளியானையின் உயிர்த்தென் உள்ளம் பின்னுந் தன்னுழை யதுவே"
"மென்தளிர் போல்….
குளிர்ந்த மதரித்த கண்கள் மழைக்கு உவமிக்கப்படுதல்.
"திருமடந்தை…..
செம்முல்லைப்பூக்கள் சிச்சிலிக் குருவியின் வாய்க்கு உவமிக்கப்படல்

**உருவகஅணி**
சிரல் வாய்

**சிலேடை**
விடாய், ஆற்றியே கஞ்சிகுடி, களித்தின்று போ.

2. விவேக சிந்தாமணியில் பெண்ணின் கண்ணழகு விபரிக்கப்படுமாற்றை நோக்கின்
   - தாமரை பொய்கையில் உள்ள தண்ணீரை கையில் முகந்து தன் முகத்தருகே ஏந்திப்பார்த்தாள். அதில் தெரிந்த நிழலைப்பார்த்து "கெண்டை மீன், கெண்டை மீன்" என கூவுதல்
   - இதன் மூலம் கெண்டை மீனை ஒத்த கண்கள் எனல்
   - வாள்போன்ற கண்களையுடைய பெண் என கண்ணழகு சிறப்பிக்கப்படுகிறது.

"அழகான ஒரு சோடி கண்" களில் கண்கள் தம் அழகால் பல துன்பங்களை ஏற்படுத்துகின்றன.

   - அம்புகள் போல பாய்ந்து உள்ளத்தைப் புண்ணாக்குதல்
   - புகையுள்ளே மின்னி சிரித்தல்
   - அவளுடைய பார்வையானது அவனுக்கு இனிமையான உணர்வினை தருகின்றமை "நறை தாங்கிய கண்கள்" என்பதன் மூலம் உணர்த்தப்படுகின்றது.
   - அவளுடைய கண்ணிமைகளின் அசைவு அவனுக்கு நடனமாக புலப்படுவதனை 'தத்தி திமிக்கி' நடன ஜதி மூலம் வெளிப்படுத்தல்.

3. (அ)
   - காவிரி சோழ நாட்டை வளப்படுத்தும் நதி.
   - மதகினூடு பாய்ந்து கரைகளையும் வரப்புகளையும் உடைத்து மக்களை மகிழ்ச்சி உள்ளத்தில் ஆழ்த்தும்
   - கரிய கயல் மீன்களாகிய கண்களை விழித்து நளினமாக செல்லுதல்.
   - விலங்குகள், பறவைகள் விரும்பும் நதியாக விளங்குதல். இதன் மூலம் காவிரி சோழநாட்டை வளப்படுத்தும் ஒரு பிரதான நதியாக விளங்குவதைக் கண்டு கொள்ளலாம்.

(ஆ)

- பூரண சந்திரனை ஒத்ததும் நிலைபேறு உடையதுமான வெண்கொற்றக் குடையை உடையவன்.
- நேர்மையான ஆட்சி செலுத்துபவன்
- நீர்வளமும் நிலவளமும் உடைய காவிரி நாட்டிற்குச் சொந்தக்காரன்.
- இவற்றை எல்லாம் பேணிக்காக்கக்கூடிய வீரர்களைக் கொண்டவன்.
- கங்கை நதி பாயும் பிரதேசங்களையும் கன்னியாகுமரி வரை நிலைபேறுடைய ஆட்சியை உடையவன்.

4. (அ)

- சினிமாவில் பல்துறைவேலைகளை தானே செய்தமை
- சினிமாப் பட்டறையில் நடிப்புத்துறை தவிர ஏனைய துறைகளுக்கு யாரையும் நியமிக்காது தானே அவற்றைக் கவனித்தமை
- பேக்லைற் உத்தியை கையாண்டு வெற்றி பெற்றமை.
- அழகியற் கூறுகளை பாமரர்களும் ரசித்து கைதட்டுமளவிற்கு படைத்துள்ளமை.
- தமிழ்ச் சினிமாவில் நாயக, நாயகிக்கு வெள்ளை நிறம், அழகு, கவர்ச்சி இருக்க வேண்டும் என்கின்ற பொதுவான மனப்பான்மையைத் தகர்த்தமை.
- கம்பியூட்டர் உபகரணங்கள் இல்லாமையால் கைகளால் ஒவ்வொரு காட்சியை சரிசெய்து வந்த காலங்களில் லில்லி என்ற உத்தியை கையாண்டமை.
- ஒப்பனை மூலம் தமிழ் அடையாளம் சார்ந்த அழகியலை சினிமாவில் சித்திரித்துக் காட்டியமை.
- இலாபத்திற்காக எந்த மலினங்களுடனும் சமரசம் செய்து கொள்ளாது ஆராக்கியமான கலைச் சூழலை உருவாக்கியமை.
- தமிழ் சினிமாவில் இயற்கையை ஒரு பாத்திரம் எனும் அளவிற்கு உயிர்ப்போடு காட்டியமை.
- திரைப்படப்பாடல்களை படமாக்கிய போது ஆபத்தான காட்சிகளை ஒதுக்கி காட்சியில் தனித்துவங்களை அறிமுகப்படுத்தியமை.

(ஆ)

- வியாபார நோக்கமன்றி நல்ல சினிமாவில் அக்கறை காட்டி வளர்த்தமை.
- தனது தனிப்பட்ட வாழ்க்கையை விட கலை உலக வாழ்விற்கு முக்கியத்துவம் அளித்தமை.
- சினிமா பற்றிய தனது கனவுகளை, மனதில் உள்ள எண்ணங்களை நிறைவேற்றியமை.
- கூட்டுறவு முறையில் படம் எடுப்பதில் அக்கறை காட்டியமை.

5. (அ)

- குடும்பத்தைப்பற்றி அயலவர்கள் கதைக்கும்போது அவர்களோடு கதைக்காமல் தனிமைக்குச் சென்றமை.
- புதிதாக சென்ற நாட்டில் புதிய நண்பர்களோடு சேர்ந்து அவர்கள் விலகும்போது மீண்டும் தனிமைக்குச் சென்றமை.
- குழந்தையோடு வந்த குடும்பத்தோடு சேர்ந்து பழகிய தருணத்தில் மீண்டும் ஒரு நிராகரிப்பால் தீவுக்குள் மீண்டும் சென்றமை.

(ஆ)

- மகிழ்ந்திருந்த தருணங்கள்.
- சிறுவயதில் அயலில் உள்ள சிறுவர்களோடு சேர்ந்து விளையாடுதல்.
- புததிதாக சென்ற நாட்டில் புதிய குடும்பத்தோடு பழகிய சந்தர்ப்பம்.
- காதலி இன்னொரு குடும்பம், குழந்தை ஆகியோருடனும் பழகிய நாட்கள்.